ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2007* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *37/2007*) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2007

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007* ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *33/2007*), மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2007)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரின்...

திரு. சி. ஞானசேகரன்: இதிலே Important points இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் நான்கு முறை ஏற்கெனவே நம்முடைய சென்னை போன்ற நகரங்களிலே அனுமதி இல்லாமல் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்களை regularize செய்வதற்காக, வரைமுறைப்படுத்துவதற்காக இந்த அவையிலே நான்கு சட்டங்களை நாம் கொண்டு வந்தோம். இந்த நான்கு சட்டங்களை நாம் கொண்டு வந்த பிறகும்கூட, நீதித் துறை Judicial Activism, பொதுவாக நாம் இயற்றுகின்ற சட்டத்திற்குத் தகுந்தாற்போல்தான் அங்கே நீதி வழங்க வேண்டுமேயொழிய, அவர்களாகவே சில வரைமுறைகளை வைத்துக் கொண்டு, கட்டடங்களை இடிக்க வேண்டும் என்று எல்லாம் உத்தரவு போட்டு, ஒரு பெரிய பிரச்சினை உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்த நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஒரு Monitoring Committee— இந்தக் கட்டடங்களை எல்லாம் இடிக்கக் கூடாது என்று நாம் ஏற்கெனவே அவசரச் சட்டம் பிறப்பித்த பிறகும்கூட, Monitoring Committee இன்னும்கூட நோட்டீசை அனுப்பி கட்டடங்களை இடிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆகவே, நான் பணிவன்போடு அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இப்போது பொது நல வழக்கு என்ற பெயரால் சில பேர் வழக்கைப் போட்டு, நம்முடைய அரசு எடுக்கக்கூடிய கொள்கை முடிவை அதேபோல இங்கு இயற்றப்படுகிற சட்டத்திற்கு நேர்மாறாக —Judicial Activism, அதனால் — வரக்கூடிய தீர்ப்புகள் இந்த நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டி இப்போது Monitoring Committee, building–ஐ இடிக்க வேண்டும் என்று சொல்லி சென்னை நகரிலே நோட்டீஸ் அனுப்பிக் கொண்டிருப்பவர்களை எல்லாம் எப்படியாவது நீங்கள் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

@ 17-10-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது

2007, அக்டோபர் 22] [திரு. சி. ஞானசேகரன்]

அதுபோல இந்த building–ஐ இடிப்பதற்கு எல்லாம் M.M.D.A.–விலே ஆளே கிடையாது. ஆகவே இவற்றை எல்லாம் நகராட்சியிடம்தான் ஒப்படைக்க வேண்டும் அல்லது மாநகராட்சியிடம்தான் நீங்கள் ஒப்படைக்க வேண்டும். ஆகவே நான் நம்முடைய அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த regularization சட்டத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டு வந்து நீதித் துறையின் Judicial Activism–க்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, ஏழையெளிய மக்கள் மற்றவர்கள் எல்லாம் பணத்தைப் போட்டு கட்டி இருக்கக்கூடிய கட்டடங்களுக்கு முழுப் பாதுகாப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) அமைச்சர், ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? (குறுக்கீடு) சரி, திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நகர் ஊரமைப்புச் சட்ட முன்வடிவினை நிறைவேற்றுகிற வேளையில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை மாநகரில் விதிமுறைகளை மீறி பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டு அந்தக் கட்டடங்களை எல்லாம் முறைப்படுத்த வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே பல முறை விவாதிக்கப்பட்டு சட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு அதை நடைமுறைப்படுத்துகிற வேளையில் நம்முடைய உயர் நீதிமன்றம், இப்படிப்பட்ட முறைகேடுகள் கூடாது; இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கடுமையாக உத்தரவிட்டது. அந்த உத்தரவுக்குப் பிறகு தமிழக அரசின் சார்பிலே உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அரசின் கோரிக்கையை, மேல்முறையீட்டைப் பரிசீலித்த உச்ச நீதிமன்றம் நீதியரசர் திரு. பாலசுப்ரமணியம் உள்பட இரண்டு பேர் கொண்ட அமர்வு அதைப் பரிசீலித்து, இந்த அரசின் மேல்முறையீடு என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று —உயர் நீதிமன்றமும் நிராகரித்திருக்கிறது; அதையே உச்ச நீதிமன்றமும் உறுதிப்படுத்தி—அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. உறுதியாகச் சொன்னால், நீதிமன்றத்தினுடைய நடவடிக்கையிலே நீதிமன்றத்தினுடைய உத்தரவிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கிற, நீதிமன்றத்தை மதிக்கிற நம்முடைய அரசு, இந்த உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற உத்தரவுகளையும் மதிக்க வேண்டும் என்பது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய வேண்டுகோள். காரணம்,

அரசு அனுமதி பெற்று கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். அப்படிக் கட்டடங்கள் கட்டப்படுகிற வேளையில் ஒரு மாடி, 2 மாடி, 3 மாடி என்று அனுமதி பெற்றுவிட்டு, 9 மாடி, 10 மாடிக் கட்டடங்களைக் கட்டிக்கொள்கிறார்கள். அப்படிக் கட்டடங்கள் கட்டப்படுகிற வேளையில் சாலையோரத்திலே வாகனங்களை நிறுத்தாமல் அந்தக் கட்டடங்களுக்குள்ளே வாகனங்கள் நிறுத்துவதற்கு வசதிகள் உருவாக்கப்படுகிறதா என்று சொன்னால், இல்லை. அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப சாலையை ஒட்டிக் கட்டிக்கொள்கிறார்கள். இன்று எங்கு பார்த்தாலும் சாலைகளிலே வாகனங்கள் நிறுத்தப்பட்டு, போக்குவரத்திற்கு மிகப் பெரிய இடையூறாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிச் சொல்கின்றவேளையில்தான் உச்ச நீதிமன்றம் ஒன்றைச் சுட்டிக்காட்டியது. உச்ச நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளை அப்படியே சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

"இந்த மாநில அரசாங்கத்தினுடைய மேல் முறையீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. இப்படி அனுமதித்தால் இந்த நிலைமை எங்கே போய் முடியும்" என்று சொல்லிவிட்டு, "சென்னை வளர்ந்துகொண்டிருக்கிற நகரம், இன்று சென்னை நகரம் நரகமாக மாறிக்கொண்டிருக்கிறது" உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி சொல்கிற வார்த்தை, "வளர்ந்து வருகிற சென்னை நகரம், நரகமாக மாறி வருகிறது. மக்கள் வாழ்வதற்கு லாயக்கற்ற நகரமாக இருந்துகொண்டு இருக்கிறது. இப்படி அனுமதித்தால் இந்த நிலை எங்கே போய் நிற்கும்" என்று உச்ச நீதிமன்றமே சுட்டிக்காட்டியிருக்கின்றது. அப்படி நம்முடைய அரசின் சார்பிலே உச்ச நீதிமன்ற உத்தரவை ஓராண்டு காலம் ஒத்தி வைக்க வேண்டும் என்று சொல்வதற்கான காரணம் ஒன்று, புதிய பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினுடைய இரண்டாவது பெருநகரத் திட்டத்தை நிறைவேற்றுவது; இரண்டு, சென்னை நகரைச் சீரமைக்க வேண்டும் என்று சொல்லப்படுவது; மூன்று இதை அகற்றுவதனாலே குடிசைகள், நடைபாதை வியாபாரிகள் பாதிக்கப்படக்கூடாது என்று சொல்லப்படுவது; நான் இப்போது கேட்கிறேன். இப்படிப்பட்ட கட்டடங்களை, விதியை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களை அகற்றுவதாலே குடிசைகளும், நடைபாதை வியாபாரிகளும் எப்படிப் பாதிக்கப்படுவார்கள்? எந்த விதத்திலும் பாதிப்பு வராது. கட்டாயம் பாதிப்பு வராது. இன்னொன்றையும் நான் அரசைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். Time ஆகிவிட்டது.

திரு. ஜி.கே. மணி: முடித்துவிடுகிறேன். பூங்காக்கள் அமைப்பதாகச் சொல்லி சாதாரண ஏழையெளியவர்கள், 30 ஆண்டு காலம், 40 ஆண்டு காலம் வாழ்ந்துகொண்டிருக்கிற ஏழைகளின் குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆக, ஏழைகளையெல்லாம் அப்புறப்படுத்துகிற இந்த வேளையில், விதியை மீறி, தொடர்ந்து கட்டியவர்களை ஏன் அப்புறப்படுத்தக்கூடாது என்பதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கேள்வி. ஆகவே, இதையெல்லாம் உணர்ந்து பார்த்து இப்படிச் செய்வதனாலே ஏழைகளுக்குப் பாதிப்பு வராது. குடிசைவாசிகளுக்குப் பாதிப்பு வராது என்பதையும் சொல்லி, ஆக ஒட்டுமொத்தமாக, நிறையப் பேச வேண்டும் என்று இருந்தாலும்கூட காலத்தினுடைய அருமை கருதி இந்தச் சட்டமுன்வடிவை இப்போது நிறைவேற்றாமல் ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் எனத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) திரு. நன்மாறன் என்ன? நீங்கள் சொல்ல வருவதையெல்லாம் எல்லோரும் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் நேரத்தைப் பாருங்கள் 1-37. தெரிகிறதா?

திரு. என். நன்மாறன்: சுருக்கமாக முடித்துவிடுகிறேன். இரண்டே நிமிடங்கள். இதிலே, பதிவுக் கட்டணம் என்று ஒன்று வந்திருக்கிறது. பதிவுக் கட்டணத்தை 5 ரூபாயை 10 ரூபாயாக்குவது, 25 ரூபாயை 50 ரூபாயாக்குவது என்று வந்திருக்கிறது. காரணம் சொல்லும்போது 1992-ஐவிட இப்போது மதிப்பு கூடி இருக்கிறது என்கிறார் அமைச்சர் அவர்கள். Guideline value என்கிற முறையில் மதிப்பு ஏகத்துக்குமாகக் கூடி பத்திரப் பதிவு அலுவலகங்களில் பதிவு நடக்காமல் பத்திரமாக இருந்துகொண்டேயிருக்கிறது. வாங்கவும் முடியவில்லை; விற்கவும் முடியவில்லை. ஆகவே, இந்தக் கட்டண உயர்வை மறு பரிசீலனை செய்ய வேண்டும். குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துகளைத் தெரிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கோ.க. மணி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் இந்த அவசரச் சட்டத்தை

[திரு. பரிதி இளம்வழுதி] [2007 அக்டோபர் 22

ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதற்காக ஒரு சில கருத்துகளைச் சொல்ல வேண்டியது அவசியமாகப்படுகிறது. இந்த அவசரச் சட்டம் கொண்டு வந்ததே, எல்லா தன்மைகளையும் ஆராய்ந்து, அவற்றிற்காக ஒரு நல்ல தீர்வைக் காண வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான், பேரவை இல்லாத காரணத்தால் அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. சென்னைப் பெருநகரின் எல்லைக்குட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் அபாரமான தொழில் வளர்ச்சியால், மக்கள் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குக் குடிபெயர்வதாலும், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே போவதாலும் சென்னை நகரில் அதிகாரம் அளிக்கப்படாத கட்டமைப்புகள் உருவாகியிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தக் கட்டமைப்புகள் தோன்றுவதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 மீது தகுந்த ஆலோசனைகளைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் சட்டத்தில் தேவையான மாறுதல்கள் செய்வதற்கும், தகுந்த ஆலோசனைகளை எடுத்துரைக்கவும் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் குழு ஒன்றை இந்த அரசு அமைத்துள்ளது. இரண்டாவதாக சென்னை மாநகரில் ஏற்பட்டு வரும் பல்வேறு துறைகளின் அபார வளர்ச்சியினை, நகரின் அடுத்த 20 ஆண்டுகளுக்கு, அதாவது 2026 ஆம் ஆண்டு தேவைகளையும் கருத்தில் கொண்டு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் இரண்டாவது முழுமைத் திட்டத்தையும் தயாரித்து வருகிறது. 31-8-2007 வரையிலான கால அளவினைக் கொடுத்து பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டது. எனவே, 2 ஆம் முழுமைத் திட்டம் சென்னை நகரில் அமல்படுத்தப்படும்போது மேற்கூறப்பட்ட அதிகாரம் அளிக்கப்படாத கட்டடங்களின் வளர்ச்சிக்கு ஒரு வகையான தீர்வை அளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் நீங்கள் குறிப்பிட்டதைப்போல குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்வதற்கும் அரசு ஒரு விரிவான கொள்கையை உருவாக்கி வருகின்றது. மேலும் தெருக்களில் விற்பனை செய்பவர்களின் செயல்பாட்டையும், கூவி விற்பவர்களின் செயல்பாட்டையும் ஒழுங்குபடுத்துவதற்காக செயல் திட்டம் ஒன்றையும் உருவாக்கி வருகின்றது. எனவே, மேற்குறிப்பிட்ட பல்வேறு காரணங்களை ஆய்ந்து பார்க்கின்றபோது சென்னைப் பெருநகர திட்டப் பரப்பிடத்தில் வளர்ந்துள்ள அதிகாரம் அளிக்கப்படாத மேம்பாடுகளின்மீது எடுக்க வேண்டி வரும் செயல்முறை நடவடிக்கையை enforcement—ஓராண்டு கால அளவிற்கு

2007 அக்டோபர் 22] [திரு. பரிதி இளம்வழுதி]

நிறுத்தி வைத்து அவற்றின உரிமையாளர்களையும், அதில் குடியிருப்போரையும் பாதுகாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இங்கே உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன் மற்றும் உள்ளவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து அதைத் தக்க வகையிலே நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான் இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, இதை மீண்டும் ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டியது அவசியம் இல்லையென்ற என்னுடைய கருத்தைப் பதிய வைத்து இந்த மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்-ஊர் அமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2007). மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,